உ

பரமபதி துணை.

இந்து தேசாபிமானிகள்

# ஜீவிய செர்தமிழ்த் திலகம்.

## முதற் பாகம்

இவை

முத்தமிழ் க்ஷேத்திர வித்வரத்னம்

**A. S. சதாசிவ தாஸ் அவர்களால்**

இயற்றப்பெற்றன.

---

மதுரை புத்தகவியாபாரம்

டி. கிருஷ்ணசாமி பிள்ளை

வெளியிட்டது.

---

[இதன் விலை] **1921** [அண 4.

(ரிஜிஸ்டர் காப்பிரைட்).

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

—(o)—

இதனால் சகல கனதனவான்களுந்தும், புத்தக வியாபாரிகளுக்கும், புத்தகங்களை அச்சிடுபவர்களுக்கும், வெளியிடுவோர்களுந்தும் தெரிவித்துக்கொள்வது:—

"இந்து தேசாபிமானிகள் ஜீவிய செந்தமிழ்த் திலகம்" என்ற தலைமைப்பெயருள்ள இப்புத்தகத்தை யான் கிரயம்பெற்று இந்தியன் காபிரயிட் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் மேற்சொல்லிய தலைமைப் பெயரையாவது அல்லது அதிலுள்ள பாடல்களில் எதையாவது எவராவது நமது உத்தரவன்றி அச்சிடுவாராகில் அதனால் நமக்கு நேரிடும் சகல நஷ்டங்களுந்தும் ஷைபார்கள் பாத்தியப்படுவார்கள். அல்லாமலும் இந்தியன் காபிரயிட்டை உல்லங்கனம் செய்த குற்றத்திற்கும் ஆளாவார்கள்.

இங்ஙனம்,

**T. கிருஷ்ணசாமி பிள்ளை**

புத்தகவியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.



பாரதமாதா.

DESIGN RESERVED

PRICE 0–0–6

KRISHNASWAMY PILLAI, BOOKSE[illegible] MADU[illegible]
MADURA.

# முகவுரை.

---

தற்காலத்தில் நமது பாரத தேசத்தில் மின் வலி எழுச்சியை யுண்டாக்கக்கூடிய சங்கீதம் மிகவும் அத்தியாவசியமாயிருக்கிறதென்பதை நிபுணர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். பிரசங்கங்கள், பாடங்கள், வாசகங்கள் இவைகளைக் காட்டிலும் ராகத்தோடுகூடிய பாட்டுகளின் மூலம் ஒருவர் மனதை எளிதிற் கவரலாம். மேலும் அப்பாட்டுகள் கல்லாதாரு மறியத்தக்க எளிய நடையில் இருக்கும் பக்ஷத்தில், எல்லா ஜாதியாரும், பெரியோரும், சிறியோரும், அனைவரும் அவைகட்காளாவார்கள். இதையறிந்தே வங்காளத்தில் ரவீந்திர நாதரின் பாடல்களை, சந்யாசிகட்கும் பிச்சைக்காரருக்கும் புகட்டி ஷியார் தேசமெங்கும் அவைகளைப்பாட, வங்காளத்தில் தேசபக்தி மிகுந்திருக்கிறது. அதைப்போல் தேசபக்தியை நாடெங்கும் புகட்டத்தக்க பாடல்கள் இது வரையில் தமிழ் நாட்டில் கொஞ்சமே யுள. இப்புத்தகத்தை இயற்றும் ஸ்ரீமான் A. S. சதாசிவதாஸ் அவர்களுக்குத் தமிழ் நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது. ஏனெனில் "இந்து தேசாபிமானிகள் ஜீவிய சேந்தமிழ்த்திலகத்தில்" அடங்கிய பாட்டுகள் எளிய நடையிலும் தேசபக்தி பொங்கியதும் படிப்போர் கேட்போர் மனதைக் கவரத்தக்கதாயும் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிற் பிறந்த ஒவ்வொருவருமிதை நன்கு கற்று தேசமெங்கும் பரப்பினால், அதி சீக்கிரத்தில் நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயை யொழிந்து சுதந்தரதேவியின் முன் நம்மை நிறுத்துமென்பதில் சந்தேகமில்லை.

மதுரை,
30—1—21. } ம. சு. மந்திரேஸ்வரசர்மா.

# மதிப்புரை.

மதுரை வக்கீல் ஸ்ரீமான்

## எம். எஸ். இராமசாமி அய்யர் B. A. B. L.,

அவர்கள் எழுதியது.

---

"பழயனகழிதல், புதியனபுகுதல்" என்ற நியாயத்திற்கிணங்க, தற்போது பகவன்னுமக் கீர்த்தனைகளினும் பாகவத நாமக் கீர்த்தனைகளே உயர்வாகக் கருதப்படுகின்றன. இதுசரியே. ஸ்ரீராமரின் பாதங்கள் வனத்தில் நோகினும் அதனைச்சேவித்த பாதுகைகள் நந்திக்கிராமத்தில் அரசாண்டதை அறியீர்களோ? மேலும், பெரியர் வாழ்க்கைச் சரிதமெலாம் நமக்குரிய வாழ்வில் உயர்வெய்தலாமென்றே தெரியச்சொல்லும். ஆகவே நம் தேசத்தொண்டில் தமதுடல் பொருளாவி தனைக்கொடுத்தும், கொடுக்கத்தயாராகவுமுள்ள தேசபக்த சிகாமணிகளாகிய மஹரிஷிதிலகர், மஹாத்மா காந்தி, லஜபத்ராய் இவர்களது சரித்திரத்தைப்பற்றிப் பாடுவது இக்காலத்திலோ ரவசியமான காரியம். அதனைச் செய்வோர்கள் நீடூழிவாழ்வாராக!

# சாற்றுச்செய்யுள்.

---

மதுரை வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

**S**. கலியாணசுந்தரம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வாக்கியநிர் வாகிகள்ச பாசென்ன நயவசன
மதுரதிவ் வியசொல் லுளான்
வண்மைபெறு மணிமாட மிகுமதுரை நன்னகர்
வாழுமெய்ஞ் ஞான மேலான்
யோக்கியன் கங்காகு லத்தையா சாமிமால்
உளமகிழ்ந் தருள் புத்திரன்
உத்தமன் சத்தியன் சங்கரச தாசிவ
னுறுதாச நாம வழகன்
பாக்கியன் சுயநலம் பாராதிப் பாரினிற்
பாங்குட னுழைத்த வர்மேற்
பக்தியுட னிந்தியா தேசாபி மானிகள்
பகர்சீ வியசரித் திரப்
போக்கதைச் செந்தமிழ்த் திலகமா மென்னவோர்
புவிதிகழ் தருகீர்த் தனம்
புகழ்பெறச் சாற்றினான் தகைமைபெற யாவரும்
போற்றியுய்ந் திடவு மாதோ

---

உ

# பொருள் அடக்கம்.


1. விநாயகர் துதி.
2. சரஸ்வதி துதி.
3. அவையடக்கம்.
4. பாரதமாதா துதி.
5. வந்தேமாதரம்.
6. மஹாத்மா காந்தி.
7. ஷை
8. ஷை
9. ஷை
10. லாலா லஜபதிராய்.
11. ஷை
12. ஷை
13. தாதாபாய் நௌரோஜி.
14. ஸ்வாமி விவேகானந்தர்.
15. லோகமான்ய பாலகங்காதர திலகர்.
16. ஷை
17. அலிசகோதரர்—திலகர்.
18. அலிசகோதரர்.
19. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு.
20. சேலம் சக்கரவர்த்தி ஸி. இராஜகோபாலாசாரி.
21. டாக்டர் டி. எஸ். எஸ். இராஜன்.
22. ஜேய்—ஜேய்—ஜேய்.
23. மங்களம்.

பரமபதி துணை.

# இந்து தேசாபிமானிகள்

ஜீவிய

# செந்தமிழ்த் திலகம்.

## 1. விநாயகர் துதி.

வெண்பா.

தேசாபி மானிகளின் ஜீவ்யசெந்த மிழ்த்திலகம்
பாசாபி மானமொடு பாடுதற்கு—பாசாங்கு
சக்கரத்து வத்திமுகன் றன்னிருபா தம்பணிந்தஞ்
சக்கரத்து ளாருமென தன்பு.

## 2. சரஸ்வதி துதி.

வெண்பா.

தேசபக்த வாசிகளின் ஜீவ்யசெந்த மிழ்த்திலகப்
பாசுரப்பண் மாலை பகருதற்கு—வாசமிகு
புத்தகத்தி முத்தமிழின் பொக்கிஷத்தி வித்தகத்தி
சித்தகத்தி வாணியருள் செய்.

## 3. அவையடக்கம்.

வெண்பா.

மயிலாடக் கண்டதொரு வான்கோழி தானும்
ஒயிலாய் நடித்தகதை ஒக்கும்—வியப்பென்பா

தேசாபி. மானிகளின் ஜீவ்பசெந்த மிழ்த்திலகம்
பாசாபி மானமெனப் பார்.

---

## 4. பாரதமாதா துதி.

சாரதாகல் யாணியே என்ற மெட்டு.
இராகம் பார்ஸி தாளம் நோட்.

கண்ணிகள்

பாரத மாதா கதி
பரமவடியார்க் கித்ததி
பண்டண்ட ருங்கண்டு தொண்டென்றும் போற்றிய
பரிமணமலர் சாற்றிய(பா)

நாரதாதி முத்தரும்
நாஞன்கோரிரு சித்தரும்
நனிமாதவ முனிவோர்களும் பணிவோர்சிவ பத்தரும்
நடமிடவரு ஊத்தரும்(பா)

கம்பன்காள மேகமே
காளிதாஸ்வி வேகமே
கவிக்கூத்தன் புகழேந்தி புவிப்பாண்டியன் யூகமே
கலைஞர்வில்லிய னேகமே(பா)

ஆறுபத்து மூன்றடி
யார்மகத்வ வான்முடி
ஔவைப்பெண்செவ்வைப்பண்ணெவ்வத்திருவள்ளுவர்
அருந்தமிட்கொடை வள்ளுவர்(பா)

தேசபக்திச் சேந்தியே
ஸ்ரீமஹாத்மா காந்தியே
சீராரு மபிமானப் பேராருஞ் சோதரம்
சிறக்கவந்தே மாதரம்(பா)

தமிழ்வரப்பிர சாதமே
சதாசிவசங் கீதமே
சந்தானச் செந்தேனே சந்தப்பண் நாதமே
ததும்பியவி நோதமே(பா)

---

## 5. வந்தேமாதரம்.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே என்ற மெட்டு.

இராகம் தேசிகம் தாளம் ஏகம்.

பல்லவி.

வந்தே மாதர வந்தனையே ஜெய (வந்)

அநுபல்லவி.

வண்மை மிகுந் தேசபக்த
உண்மைக்குரி யோர் மகத்வ (வந்)

சரணங்கள்.

நீர் நில வயல்கிரி வளமலி நாடு
நித்யபரமானந்த வாணிபம் நீடும்
சீர்பெறு மருமறை திகழ்சரு பேடு
சித்தத்தே பத்திக்க மெத்தத்தே வர்க்குற்ற(வந்

மெய்யரிச் சந்த்ரன் ஜனகஸ்ரீ ராமன்
மிஞ்சுபல பஞ்சவருங் கன்னன்வாழ்ந்த நேமம்
செய்யறஞ் சேர்புத்தரும் வசித்தமிகு க்ஷேமம்
தெள்ளுதமி ழார்ந்ததிரு வள்ளுவருஞ் சார்ந்திலங்க(வந்)

வான்மீகி வந்திரி வியாசமுனி வாக்யம்
வாகட தன்சுகர் வசிட்டர்சி லாக்யம்
மேன்மையுறு பட்டணத்தார் ஆழ்வார்கள் பாக்யம்
வேதாந்த நாயன்மார் ராமகிருஷ்ணர் துங்க(வந்)

கம்பனொட் டக்கூத்தன் காளிதாஸ் யூகி
காளமே கம்புக ழேந்திவி வேகி
உம்பர்பு கழவ்வை வில்லிசாத் மீகி
உயர்பாண்டி யன்சேர சோழவித் துவாம்ச(வந்)

சந்த்ர வதிதம யந்திசா வித்ரி
ஜானகி த்ரௌபதி கண்ணகி மித்ரி
அந்தமிகு காரைக்கா லம்மைமங் கம்மாள்
ஆட்சிவிக் டோரியா மாட்சியாண் டாளுபர்(வந்)

காந்திம ஹாத்மாதா தாபாய் நௌரோஜி
கனம்விவே கானந்த ஸ்ரீமதி சரோஜி
சார்ந்த திலகமுனி லாலாலஜ பதிராய்
சந்ததஞ் சங்கர சதாசி வன்றமிழ்(வந்)

---

## 6. மஹாத்மா காந்தி.

தேவாதிதேவா ஜெயவல்லவா என்றமெட்டு.

இராகம் பியாகு அடதாளம்.

கண்ணிகள்.

1. காந்திமஹாத்மா கதாப்ர சங்கம் பண்
கழறுமக மதா பாத்தி ணங்கும்
வாய்ந்த பணிய மதக்தி லங்கும் குண
வான்கரம் சந்த்மக வாய் விளங்கும் (கா)

2. பதினெட்டரை நூற்றுப் பத்தொன் பதாம் நேர்
பகராண்டக் டோபர் தேதி ரெண்டதாம்
மதிமிகு காந்தி மஹான் பிறப்பாம் இம்
மாண்புணர்ந் தன்புறக் கேண்மின் சதா (கா)

3. பாலப் பருவ முதற் குயின்று பற்
பலகலை பாஷை களும் பயின்று
சாலவிங் லண்டாப்ரிக் காவுஞ் சென்று நற்
றகைமையுத் யோகத் தனத் துழன்று (கா)

4. பரோபகாரந் தங்கும் பாத்திரமே மா
பாக்யமிகுந் திட காத்திரமே
சராகவிந்த்ப னெபின் யன்சரமே யென
ஸ்தாபித் தார்வாரப் பிரசுரமே (கா)

5. ஒபாதுல கோர்க் குபகாரமே செய்
திடல் பொருளாவிய தின்சாரமே
நேயா துபன்யாசஞ் செய் தீரமே சொல
நேருமானந் தஞ்ச விஸ் தாரமே (கா)

6. வித்தகச் செல்வவிக் ஞாபனமே கீத
வீணைப் பஜனுமிர் தக் குணமே
புத்தகப் பாணி புகல் மனமே தினம்
போற்றுஞ் சதாசிவ சோ பனமே (கா)

---

## 7. ஷை

ஏனுதியே என்றஓரடி வர்ணமெட்டு.
இராகம்—மோகனம் தாளம்—ரூபகம்.

பல்லவி.

காந்தி மகான் மோகனதாஸ் (கா)

ஜீவ காருண்ய மாபுண்ய
வான்கண்ய லாவண்ய (கா)

அருங் கல்விக்குண செல்வப்பிர
பல்யத்துறு நல்விற்பன (கா)

கண் காட்சியெனு மாட்சிமிகு
சூட்சிசுய ஆட்சி கோருங் (கா)

இக் கலியுகமதிற் குலவிய புகழ்
நிலைபெறவரு நலமுயர் கனங் (கா)

பிர காசத் தபன் யாசத் துரை
ராசர்க்குமித் தேசோபகார (கா)

அநுபல்லவி.

சார்ந் தம ஹானுபாவன்
தங்குஞ் சீர்

பொங்கும் பேர்
துங்கம் பார்
யெங்குஞ் சார்
தவமணி யென வவதரித் தெழில்
பவமறபிர ணவமுறை செயுங் (கா)

சரணம்.

போர்தகு ஞானுபோகன்
புடத் தங்கத்
திடத் தங்கத்
துடைத் தெங்க
ளகத் துங்கக் (கா)
திகழ் புளகிததிரு வுளமதி குண
வளமிசை கட வுளடியே தொழுங் (கா)
புகழ் பூமிக்கின் பார் சதாசிவ
சாமிக்கன் பேமிகுந்திடுங் (கா)

## 8. ஷை

பாண்டியன் என்றமீனாக்ஷி என்றமெட்டு.
இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

போந்தவான் காந்தியின் போதம்- மஹாத்ம
புனிதமே லாதம்
சார்ந்தமு காந்த்ரசம் வாதம்-விளங்கச்
சாற்றும்ப்ர மாதம் (போ)

தொகையரா.

புகலரிய மாந்தருட் கலியுகத் திலகமாம்
புண்யப்ர தாப பூமான்
திகழ்தரு கலைபிமேனன் தேசோப காரமுந்
சித்தவை ராக்ய ஸ்ரீமான்

பாட்டு.

சுதேச மித்ரசுப ஆட்சி-ப்ரசங்கச்
சோபித மாட்சி
சதாசம் பன்னமே சாட்சி—ப்ரபல்யஞ்
சார்ந் திடுங் காட்சி (போ)

தொகையரா.

சுப்சோப னத்திளே ஜெகமே ழிரண்டினுஞ்
ஜோதி மேவுஞ் சொரூபம்
ஜெபமோதங் கரம்சந்தின் றவமே திரண்டிதஞ்
ஜெனித்திட்ட துலக லாபம்

பாட்டு.

ஜனனு கூலசீள பாக்யம்-காருண்யந்
தங்கிடுஞ்சி லாக்யம்
தனுது வித்வப்புக ழாக்பம்-பெற்றோங்தஞ்
சதாசிவ வாக்யம் (போ)

## 9. ஷை

மைகேந்து பேகுருபான் என்றமெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஆதி.

பல்லவி

காந்தி மஹான் கண்யமே ஜீவ
காருண்யமே (கா)

அநுபல்லவி.

கலியுக ஜெகத் திலக ரத்தினங்
கனம் ஸ்ரீமான் கரம்சந்த்புத்திரன் (கா)

சரணங்கள்.

சார்ந்த மனோதயாளன் சாத்வீகமாகுணாளன்
சமரசவித ரணமிகுத்திடுஞ்
சுமுகரஞ்சித சுதேசமித்திரன் (கா)

தொகையரா.

உலோகோப காரமாய் கல்கத்தாக் காங்க்ரஸில்
ஒத்துழையாமை யென்றே
நலமேவு விவாதமே காரியசித்திபெற்ற
நாயகமிவ ராம் நன்றே

பாட்டு.

உத்தம தேசபக்த ஊழியமே வகித்த
உச்சித மோனப்ர சித்தன் சதாசிவ
பட்ச மிகுத்திடு வித்தக ராகிய (கா)

---

## 10. லாலா லஜபதிராய்.

பருபருஜாரு மெட்டில் வாலாபியாலா என்பதைப் பல்லவியாக
எடுத்துக்கொள்க.

இராகம் இந்துஸ்தான் பாரஸீ தாளம் ஆதி.

பல்லவி

லா லா லஜபதிராய்

அநுபல்லவி.

நமதபிமானச் சமரசகுணவான்
நலமிகுகன ஸ்ரீமான் (லா)

சரணங்கள்.

தகைமையின் பெரிய வகமகிழாரிய
சமாஜமும் நிலைபெறத் தானிருத்தி-புகழ்
சாரும் வித்யா சாலையனேகம்
ஸ்தாபித்துடன்மதச் சீர்திருத்தி-வரும் (லா)

இகலற ஜப்பா னமெரிக்கன்பலவு
ரேகியுந்திடகாத் திரம் பொருத்தி-அன்
றெங்கிந்த்யாவென் றெங்கும் பேபரி
லங்கும்படிசெய் யுந்திரத்தின் (லா)

மன்னும் நியூயார்க் கென்னும்நகரில்
மாண்புபன்யாசக் கணைபூட்டி-ஜெய
மாட்சியுறுஞ்சுய ஆட்சியென்புவி
வழங்கிடவேதின மகிழ்நாட்டி-வந்த (லா)

துன்னும் இந்த்யா காங்கிரஸ்முதலிய
துரைத்தனவக்ரா சனக்கோபான்-கமழ்

துங்கத் தமிழுறை தங்கச்சதாசிவ
தூயவிக்ஞாபன னெனும் பூமான் (லா)

## 11. ஷ

புதிய பார்ஸீமெட்டு.

இராகம் பியாகு தாளம் ஆதி.

பல்லவி.

லாலா லஜபதிராய் (லா)

அநுபல்லவி.

நாமப்பண்பேமித்ர நேமத்தென்பார் பக்த (லா)

சரணங்கள்.

கோலா கலவிஜயன்
கோமான்விக்ஞாத ஜெபன்
சீலா கமலிணையன்
திகழும் பாஞ்சால நகரின் றலைமை (லா)

தொகையரா.

தெய்வானு கூலமே திருவுருவமாகியே
சிறந்தெழி லார்ந்த தன்றோ
சைவாம்ச ஞானமே தேசோப காரமுந்
தழைத்துலவப் புகன் றோர்

பாட்டு.

சார்ந்திலங் கும் ஆரிய
சமாஜெ னும் பேரியல்
சீந்துத ளார் சீரியர்
சீலமிகு கல்விச் சாலையுண்டாக்கிய (லா)

தொகையரா.

ஜெயமாட்சி மயசூட்சி யுபன்யாச நெறியோச்சுந்
திடகாத்ர வீரப்ர தாபன்
சுய ஆட்சி முறை தேர்ச்சி விழிகாட்சி யுறசாட்சி
சுருதிக் கிசைந்த பூபன்

பாட்டு.

முத்தமிழே மிகும்பார்
மூதுரை யாளரின் பார்
பக்தன்ச தாசிவன்பா
பகரும் வித்தகப் புகழ்மகத்துவ (வா)

---

## 12. ஷை

மைகேந்துபேகுருபான் என்றமெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஆதி.

பல்லவி.

இ ராஜேந்த்ர போகபூமான்-லாலா
லஜபதிராய் (ரா)

அனுபல்லவி மதுடம்.

நனிமிகுகலை யுணர்விசால
தனிவிதரண குணதயாள (ரா)

சரணங்கள்.

தேசாபிமானிகளில் திடகாத்ரஞானியிவர்
சிறக்கும் வித்தகர் கல்கத்தா காங்க்ரெஸ்
திறத்தினுத்தம அக்ராசனநிப (ரா)

தொகையரா.

சீராருஞ் ஜப்பா னமெரிக்கா முதலான
தேச சஞ்சார தீரன்
நாராரும் நமது தாய் நாட்டின் ப்ரதானநிலை
நாட்டும்பரோப காரன்

பாட்டு

தேவ தத்துவப்பேரான் ஜெயமேதிகழுஞ்சீரான்
தேமிகுந்திலங் கிடுஞ்சதாசிவ
சாமி செந்தமிழ்க் குகந்த பாக்கிய (ரர்)

## 13. தாதாபாய் நௌரோஜி.

கார்த்திகா நித்ய கல்யாண என்றமெட்டு.

இராகம் அமீர்கல்யாணி தாளம் சாப்பு.

கண்ணிகள்.

தேசோப கார தாதாபாய்- நௌரோஜி
சீர்த்தி மாதாவாய்
பாசாபி மான வாதானம்- பௌஷ்டிக
பாக்ய தாதாவாம் (தே)
செல்வப்ர பல்ய ரேஸ்ரீமான்- சித்தவை
ராக்ய மாபூமான்
கல்விப்ர சங்கத் தின் கோமான்-மாதிட
காத்ர நன்னேமான் (தே)
அன்பாரும் போர்டாப்பெஜுகேஷன் — ப்ரெஸிடென்
டான வனேசன்

பம்பாய்சீப் ஜட்ஜெனும் ராஜன்-தாதாபாய்
பரம வித் வரசன் (தே)

வித்தியா ரம்பஸ்கூ லார்த்தி- விக்ஞாத
விற்பனம் பூர்த்தி
பத்ரிகை ப்ரசுரக் கீர்த்தி- ராஸ்ட்காப்
டார் குஜ ராத்தி (தே)

சத்யாவ தாரனே பார்ஸி- குருமார்
சந்தா னத்தே சீர்
நித்யானந் தம்சத்தா ராசீர்- வதிக்க
நேர்ந்த நௌரோஜி (தே)

முத்தமிழ்ப் பொக்கிஷப்பூமி- வாழ்ந்திடும்
முகாந்த்ர நன் ஞமி
பக்தன்ச தாசிவ சாமி- பைந்தமிழ்
பண்புறும் க்ஷேமி (தே)

---

## 14. ஸ்வாமி விவேகானந்தர்.

திருஞான சம்பந்தனே என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்.

பல்லவி.

ஸ்வாமி விவே கானந்த
சன்மார்க்கபந்த (ஸ்வாமி)

அநுபல்லவி.

சேமவித் வாசசித் தாந்தமே ஸ்ரீமான்
தேசோப காரப் பூமான்
சன் மார்க்க பந்த (ஸ்வாமி)

சரணங்கள்.

சீராரும் ராம கிருஷ்ணபரம ஹம்ஸ
சிந்தைக் குகந்தே சிறந்திடு மம்ஸ
நாராரும்வேத நிபுணம கத்வ
நாமப்ர தாப வித்வ
சன்மார்க்க பந்த (ஸ்வாமி)

எம்மதமேனு மெழிலாரும் பத்தி
ஈடேற நாடோறு மேற்றிடு முத்தி
சம்மதமனே வுற்சாகமா சித்தி
சம்பன்ன வான கத்தின்
சன்மார்க்க பந்த (ஸ்வாமி)

தேவானுக்ரஹ சுகசெல்வப் பாக்ய
சிந்தாகுலந் தீர்த் திலங்கிடுஞ் சிலாக்ய
மூவாமொழி ஞான முத்தமிழ் வாக்ய
மூலாதார வை ராக்ய
சன்மார்க்க பந்த (ஸ்வாமி)

முந்தப்பா வாணர் மொழியும் ப்ரசங்கம்
முப்பாலி லங்கிடு மூதுரைச் சங்கம்
சந்தப்பா வோதுஞ் சதாசிவத் தங்கம்

சற்பாத்ர மே விளங்கும்
சன்மார்க்க பந்த (ஸ்வாமி)

---

## 15. லோகமான்ய பாலகங்காதர திலகர்

விளக்கிடு மீனாட்சி சந்நதியிலே என்ற மெட்டில்

பின் வேறு மகுடம்.

இராகம் அமீர்கல்யாணி தாளம் ஏகம்.

பல்லவி.

லோகமான்ய பாலகங் காதர திலகர் - தேசபக்த
நுட்பம ஞேகரமே (லோ)

அநுபல்லவி.

நுதலியவுபன் யாசதீர
முதலியவுப காரவீர (லோ)

சரணம்.

சீராருமிருடிகளில் திலகமஹாமுனிவர்
நாராருமுத்தமகுண நாயகமணியே
சீமையி லாங்கிலத் தொழிற்கட்சியாரை
நேர்மையி லிந்தியர்க் குதவிடச்செய்த (லோ)

சுய ஆட்சி பிறப்புரிமை சொந்தமெனவேபகரும்
ஜெய மாட்சி சித்திபெற்ற திடச்சித்தஞானி
ஜெகமறிந்திடப் பந்தேகாணுவிற்
பகவத்கீதையைப் பாடியருளிய (லோ)

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
சங்கர சதாசிவ சாமியன்பாளன்
சத்தியாக்கிரஹ மதைப்புகழ்ந்தவர்
வித்தியாசாலைய நேகமுண்டாக்கிய (லோ)

---

## 16. ஷை

சூரகுலசம்மாரா என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஆதி.

பல்லவி.

பாலகங் காதர திலகர் - திவ்ய
பாருக் கோர் திலகம் (பா)

அநுபல்லவி.

பாகவி வேகஸ்ரீ லோகமான்ய (பா)

சரணம்.

சீலஜனனு கூலசற் பாத்ரம்
தேசவிக் ஞாபனமேதிட காத்ரம்
ஜெயமே வியசீர் சுய ஆட்சி கோரும் (பா)

தொகையரா.

தேவதா பக்தர்களில் சிறந்தசன் மார்க்கராம்
திலகமுனி நாயகமே

மூவாசை நீக்கிப் பரோபகாரச் சித்த
மோனமாகிய தாயகமே

பாட்டு.

திருமது ரையிலுறை திகழ்தரு நாமி
செந்தமிழ்த் திலகமாஞ் சதாசிவ சாமி
தினமே புக ழார் நேமி (பா)

---

## 17. அலிசகோதரர்—திலகர்.

புதிய பார்ஸி கௌலமிஸி என்றமெட்டில் பின்சுருக்கம்

இராகம் பார்ஸீ தாளம் ஏகம்.

கண்ணிகள்.

முகம்மதலி ஷௌகடலி திலகர்
முகாந்த்ர போதத் தலைவர் (முக)

சுகமெனுமிப் பிறப்புரிமை
சுய ஆட்சி பெறப்பொறுமை
செகமெலாம் புகழருமை
சீர்த்திபாக கீர்த்திவாய்ந்த (முக)

பாலகங் காதரராம்
பாக்யத்தி லகர் ஸ்ரீமான்
சிலவிக் ஞாபனத்தின்
தேசோபகா ரஐய்யார (முக)

சத்ய நெறிதவறார்
சாமர்த்ய மேம்புகழார்
நித்யசுப வத்வீத
நேமவான்கள் க்ஷேமமோங்கு (முக)

லாலா லஜபதிராய்
நாம சிலாக்கியமே
சாலவொ ருகதிராய்
சார்ந்திடும் நற் காந்திமகான் (முக)

ஆரியச மாஜ்விளங்க
அரிய பாஷை யேமுழுங்க
காரியத்திட சித்தராய்
கமழுங்குண சமரசமா (முக)

கானகர் ஞமிர்தமே
காணுவி தாவிதமே
சானவி குலதிலக
சதாசிவன் றமிழ்க்கிதமே (முக)

---

## 18. அலிசகோதரர்.

ஐமோரா ரஸ்கே கேகம என்றமெட்டு.

இராகம் பார்ஸீ தாளம் ஏகம்.

பல்லவி:

முகம்மதலி ஷௌகடலி மூதறிவாளர்
ஆளர் ஆளர் ஆளர் (மு)

அநுபல்லவி.

ஜெகமதனிற் கீர்த்திபெற்ற தேசாபிமானிகளிற்
புகழுறுங் காந்திமஹான் போதிக்குஞ்சிஷ்யர்
சிஷ்யர் சிஷ்யர் சிஷ்யர் (மு)

நேமமிகுந் திலங்க நேர்ந்தகிலாபத்திலே
சீமைக்குத்தூதுசென்ற தேசோபகாரர்
காரர் தேசஉப காரர் (மு)

அலிசகோதரராம் அன்பார்ந்த திடகாத்ரர்
உலகோபகாரமாய் ஜெயி லுற்றமாபுண்யர்
புண்யர் புண்யர் புண்யர் (மு)

அமிர்தசரஸ்காங்கிரஸின் அன்றுவிடுதலையாய்
சமரசகாங்க்ரஸ் மேடை தாவியசீலர்
சீலர் சீலர் சீலர் (மு)

வெற்றிசேர்ந்திட்டதங்கம் வீரப்ரதாபசிங்கம்
கொற்றவரேற்றுமிகு குணமதியாளர்
ஆளர் மிகுகுணமதி யாளர் (மு)

துங்கப்பாவாணர் போற்றுந் துவாதசாந்தமதுர
சங்கரசதாசிவ சாமிசொல்யோகர்
யோகர் யோகர் யோகர் (மு)

## 19. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு.

நையாஜோபன் வாலிகே என்ற பார்ஸிமெட்டு

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

பல்லவி.

மிஸ்டர் வரதராஜுலு விகிதபக்தர் —— தேச
சுகிர்தபக்தர்

அநுபல்லவி.

பெஸ்டுபன்யாசர் பிரியவித்வாசர்
அஷ்டதிசைபுகழும் அரியபக்தர்—பூவிற்
சூரியபக்தர்
அன்புத தும்பிடுஞ் சம்பிர மம்புகல் (மிஸ்)

ஒத்துழையாமை யுபகார நேர்மை
சத்யவிரதமேலாய்ச் சார்ந்தபக்தர்—யோகம்
வாய்ந்தபக்தர்
தண்டமி ழூர்பிர சண்டபத் ராதிபர் (மிஸ்)

பிரபலக் கீர்த்தி பிரசங்கநேர்த்தி
முரசெனமுழக்கிடு மோனபக்தர்—பிர
தானபக்தர்
முத்தமிட் புவிமது ரைத்தகை மைமிகும் (மிஸ்)

திடச்சித்தஞானி தேசாபிமானி
செப்புஞ்சதாசிவன்பா திகழும்பக்தர்—எங்கும்
புகழும்பக்தர்
தித்தித் திடுமமு தத்தொத் திடுமொழி (மிஸ்)

---

## 20. சேலம் ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாசாரி.

துலங்கு செம்பொற்கோபுரம் என்றமெட்டில் புதிய சந்தம்.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

கண்ணிகள்.

சேலம் சக்ரவர்த்தி ஸி. ராஜகோபாலச்சாரி
தேசியமானதங்கமே ஸ்ரீமான்பரபல்யு
தேசியமானதங்கமே

சித்தமி குத்தம கத்வம்வி ளைத்திடுந்
தேசியமான தங்கமே
சீலமிகு முன்சிபல் சேர்மனுத்தியோகத்தில்
சிறக்கும் நாமப் புகழுலவியு மகிழ்
பிறக்கும் நேமத் திகழுறு கனவான் (சேல)

சிந்தாகுலத்துடனே வந்தோரேழை கிழ்மக்களை
க்ஷேமிக்கவைத்ததுங்கமே கர்ணவதாரன்
க்ஷேமிக்கவைத்ததுங்கமே
திட்ட சக்ரவர்த்திப் பட்டந்தரித்தவர்
க்ஷேமிக்கவைத்த துங்கமே
வந்தே மாதரமென வாழ்த்தியொத்துழையாமை
வாய்ந்த தீர்மா னப்பிர சுரமே
சார்ந்து சிரமேற் சூடிய புண்யன் (சேல)

சத்பூர்வ தாரசிலாக்யன் உத்யோகம் யாவும் நீக்கி
சற்பாத்ர மான சிங்கமே ஜனானுகூல
சற்பாத்ர மான சிங்கமே
சன்னயப் பிரசங்கஞ் சென்னையிற் றினஞ்செயுஞ்
சற்பாத்ரமான சிங்கமே
நித்யானு போகபாக்யன் சித்தமிகுவை ராக்யன்
நேர்ந்த டாக்டர் வரதராஜுலுதனைச்
சார்ந்த மதுரைக் கேஸிலுழைத்தவர் (சேல)

சித்ரம் ஆசுபலக வித்ரம் பொழிமதுரச்
சீரார்வடிவேற் சாமியே பீர்முஹம்மத்பாக
சீரார்வடிவேற் சாமியே
சிந்தைக் கந்தந் தந்த மந்த்ரகுரு
சீரார்வடிவேற் சாமியே

தத்வப்ர பல்யசிஷ்யன் நத்தப் புகல்ரகஸ்யம்
சங்கப் புவிவளர் சானவி குலமணி
சங்கர சதாசிவ சாமிநற் றமிழணி (சேல)

---

## 21. டாக்டர் தி. சே. சௌ. இராஜன்.

பஞ்சணைமேவிப் பழகாய் என்றமெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் ஏகம்

பல்லவி.

டி யெஸ் ஸெஸ் ராஜன் எத்
தினமு முலக பக்தவி லாசன் (டி)

அநுபல்லவி.

ஓயெஸ் டாக்டர் சீமான் நாளும்
ஒத்துழையாமையின் சத்தியம் பூண்டவர் (டி)

சரணங்கள்.

மாசற்ற மனமது வாய்ந்த சிலாக்யர்
வைத்திய நிபுணர் மகாபுண்யயோக்யர்
தேசுற்ற சௌந்தர்ய திரேகசௌபாக்யர்
திடகாத்ர மிகுத்தமா சித்தவை ராக்யர்
தேச ஊழியமே மிகச்
சிறந்த தெனவே தினங்கையாடுவர் (டி)
மண் பெண் பொன் மூவாசைமாற்றும்விநோதன்
மதுர கவிவடி வேற்சாமி போதன்
சண்முக சுந்த்ரவ ரப்பிர சாதன்

சாநவி சந்தானக் கானசங் கீதன்
சதாசிவ மயமே தமிட்
சம்பன்ன விகி தம் பரவிய (டி)

---

## 22. ஜெய ஜெய வாழ்த்து.

அபிரே பக்காத் திருடன்யான் என்ற மெட்டு.

இராகம் பாரஸி தாளம் ஏகம்.

கண்ணிகள்.

ஜெய ஜெய வந்தே மாதரம்
சீர் பெற்றிடு நற் சோதரம்
பயமின்றிக்குவ லய மதுபெறப்
பலகலையுரை திலகமுனிக்கு
ஜேய் ஜேய் ஜேய் (ஜெ)

உத்தம சற்குண தேசபக்தர்
ஒத்துழையாமையின் தளகர்த்தர்
சத்திய தத்துவ மெத்திசையுஞ் சொலுங்
தரமோகனதாஸ் கரம்சந்த்காந்திக்கு
ஜேய் ஜேய் ஜேய் (ஜெ)

சாமியாம்விவே கானந்தர்
சமயஸ்தாப னபந்தர்
பூமிமுழுதுங் தோமிலாது நற்
போதமீயுந்தாதா பாய்நௌரோஜிக்கு
ஜேய் ஜேய் ஜேய் (ஜெ)

லாலாலஜப திராய்க்கும்
நமதபிமான நேயர்க்கும்
சீல மிகுந்திடும் பாரதியாளுக்குஞ்
செப்புஞ்சதாசிவ செந்தமிட்டனக்கும்
ஜேய் ஜேய் ஜேய் (ஜெ)

---

## 23. மங்களம்.

ஜெய ஜெயா தேசீய என்றமெட்டு.

இராகம் தேசிகதோடி தாளம் ஆதி.

### பல்லவி.

மங்களம் நித்யவிஜய ஜெய (மங்)

### அநுபல்லவி.

சங் கீதமி குங் கானர
ஸங் கூடிவ ருங் காவிய (மங்)

### சரணங்கள்.

ஐங்கர ஞறுமுக னரனர்மீ ஞட்சிக்கும்
அறுபத்து மூவரோ டருந்தமிட்புலவர்க்கும்
அப்பர் சுந்தரர் மாணிக்கவாசருக்கும்
அப்பர் சுந்தரர்
அருமாமறைக் குருநாதனி
னருள்மேவிய வடிவேலர்க்கு (மங்)

இந்தியதேசீயபக்த செந்தமிட் திலகரத்னம்
இத்தகையசித்திபெற்ற உத்தமர்கள்யாவர்க்கும்
சந்த தமுமே வெங்கடேஸ்வர அன்கோ
சந்த தமுமே
தகைபாளரின் புக்சாலேயின்
றலகிருஷ்ண சாமிதனக்கு (மங்)

முத்தமிட் க்ஷேத்ரமதுர வித்வரத்ன நாமியே
மோனப்ரதாபசில சாநவிகுல நேமியே
தத்துவப்பேரான் சங்கரசதாசிவமய
தத்துவப்பேரான்
த்யைமேவுவி நயபாகவி
ஜபமாகிய ஜெபமோங்கலே (மங்)

சுபம். சுபம். சுபம்.

முதற்பாகம்
முற்றிற்று.

குறிப்பு:- இதின் 2ம் பாகம் அச்சிலிருக்கிறது. கூடிய சீக்கிரம் வெளிவரும்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த விலாஸப் பிரஸ், மதுரை—1921.

வெளியாகி விட்டது!　　　　வெளியாகி விட்டது!!

உலகப் பிரசித்திபெற்ற கன்னிச்சமீன் சரபம் உடுமலை

## முத்துசாமிக் கவிராயர் அவர்கள்

மாணாக்கர்

## R. K. பூமிபாலகதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்ற

இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் என்னும்

# பக்திரஸக் கீர்த்தனைகள்

## (படங்களுடன் கூடியது.)

இதில் பாரதமாதா, சுவாமி விவேகானந்தர், ஸ்ரீபாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி, அலிசகோதரர், தாதாபாய் நௌரோஜி, [லா]லா லஜபதிராய், டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலிய தேசாபிமானிகளின்பேரில் அருமையான பாடல்கள் அடங்கியிருக்கின்றன.

[விலை அணா ஐந்து]　　வியாபாரிகளுக்கு பிரத்தியேகமான விலை.

| | |
|---|---|
| பூமிபாலக தாஸரவர்களியற்றிய கருணாரஸக் காவடிச்சிந்து | 0—2-0 |
| ஆனந்த பத்மினி அஞ்சனக்கோட்டையின் அதிசயங்கள் | 0-10-0 |
| கமலவேணி (தற்கால தமிழ்க்கதை) ... ... | 0-10-0 |
| சிறுமணிச்சுடர் 1-ம் பாகம் ... ... ... | 0—3-0 |
| ஷை 2-ம் பாகம் ... ... ... | 0—4-0 |
| கமலநாதன் அருமையான நாவல் ... ... | 1—4-0 |
| நாகரத்தினம் அல்லது விஷக்குண்டூசி ... ... | 0-12-0 |
| போட்டா போட்டி கள்ளப்பாட்டு படங்களுடன் கூடியது | 0—2-0 |
| சூளாமணி அ. பலராமய்யர் எழுதியது. ... ... | 1—0-0 |
| M. S. S. ஷண்முகதாஸ் அவர்களாலியற்றப் பெற்று புதிதாய் வெளிவந்த சிறுத்தொண்டன் டிராமா சரித்திரம் | 0—6-0 |

**T. கிருஷ்ணசாமி பிள்ளை.**

ஆர். வி. & கோ ஏஜெண்ட்.

புதுமண்டபம், மதுரை.

உ

அச்சிலிருக்கிறது! எதிர்பாருங்கள் !!

புலவர்கள் புகழப்பெற்ற முத்தமிழ்க்ஷேத்திர வித்வாத்திலகம் A. S. சதாசிவ தாஸரவர்கள் இயற்றிய பக்தியானந்தத்திரட்டு என்னும் கீர்த்தனைப் பதங்கள் விலை 0—5—0.

## நேயர்களே! கவனியுங்கள்.

தமிழ் நாடெங்கும் பற்பல கீர்த்தனைகள் வெளிவந்து உலாவுகின்றன. எனினும் முக்திக்காகச் சதா துதித்துப்பக்திபுரிவோர்களுக்கும், பாடலிற்சிறந்த நாடகக்கப்பிரியர்களுக்கும், சங்கீதக் கச்சேரிகளுக்கும் இன்பம் விளைவிக்கும் இந்துஸ்தான், சிந்து, திருப்புகழ், சந்தம், பார்ஸி முதலான தற்கால நாகரீக வர்ணமெட்டுகளடங்கியதும், யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியதும் பாடப்பாடப் பரவசமும், கேட்கக்கேட்கச் செவிக்கின்பம் தரக்கூடியதும் தமிழ்நாடெங்கும் உலாவிவரும் பாடல்களில் சிறந்ததும் மகிமை பெற்றதும் முதன்மையானதுமான பாடல்கள் அடங்கியுள்ள புத்தகம் இதுதான்! இதுதான்!! இதிலடங்கிய வர்ணமெட்டுகளின் நவரசமும் பாடல்களின் பெருமையும் இப்புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்குத்தான் நன்கு விளங்கும். புத்தகத்திற்கு முந்துங்கள். சொற்பகாப்பிகள் தான் தயாராகின்றன.

### ஷை யார் இயற்றியது.

- சாஜாம்பான் சரித்திரம் 0—4—0
- அல்லிராணி சரித்திரம் 1, 2 பாகங்கள் 0—4—0
- வள்ளிச்சரித்திரம் 0—3—0
- கோவிலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் 0—4—0
- லலிதாங்கிசரித்திரம் 0—4—0
- பார்ஸிசதாரம் சரித்திரம் 0—4—0
- அதிரூபஅமராவதி 0—4—0
- தசரதி அல்லது மங்களாபுர ரகசியம் (ஓர் அற்புத துப்பறியும் நாவல்) 0-10-0

### பாரதமாதாபடம் 5" × 3½" விலை 0—0—6.

**1 அணா ஸ்டாம்பு அனுப்பினால் தபாலில் அனுப்புவோம்.**

நமது கம்பெனியில் மேற்கண்ட புத்தகங்களும் இதர சகல விதமான புத்தகங்களும் விலை சரசமாகக் கிடைக்கும்.

டி. கிருஷ்ணசாமி பிள்ளை,
புத்தகவியாபாரம்,
புதுமண்டபம், மதுரை.